# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 25வது கூட்டறிக்கை 2020.03.12

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 25வது அமர்வு 2020.03.12 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

## சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. | ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. | திரு.வீ.ஜெயச்சந்திரன் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 03. | ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. | ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. | ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. | திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. | திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. | ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. | ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. | ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 11. | ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. | ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. | ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. | ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. | திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. | திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. | திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. | திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |

## சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 2. | ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

## சமூகமளித்த உத்தியோகத்தர்கள்

| | | |
|---|---|---|
| 01. | ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. | செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

## கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 25வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

கௌரவ உறுப்பினர் அஸ்வர், கௌரவ உறுப்பினர் முஸம்மில் அவர்கள் இன்றைய சபை அமர்விற்கு வருகை தர முடியாதென்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு விடுமுறை வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம். ரீ பௌசுள்ளாஹ் |

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் - 04/25/01**

சென்ற மாதக் கூட்டறிக்கை கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

கூட்டறிக்கை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சென்ற விசேட அமர்வில் இச் சபையின் கௌரவ பிரதித் தவிசாளராக தெரிவு செய்யப்பட்ட கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் அவர்களுக்கு சபையின் சார்பில் வாழ்த்து தெரிவித்தவனாகவும், துரதிஸ்டவசமாக அத் தெரிவு இன்னும் Gazette பண்ணுப்படாததனால் உரிய அந்தஸ்த்தை இவ் அமர்வில் வழங்க முடியாததையிட்டு வருந்தியவனாக, இவ் அமர்வில் முக்கியமாக எமது சபையின் பிரதித் தவிசாளராக 2 வருடங்கள் கடமையாற்றிய கௌரவ உறுப்பினர் வெள்ளி ஜெயச்சந்திரன் அவர்களுக்கு தனிப்பட்ட முறையிலும், இச் சபை சார்பிலும், இவ் ஊர் மக்கள் சார்பிலும் அவரது சேவைக் காலத்தில் இச் சபையின் ஒற்றுமையை பேணுவதிலும், இச் சபையின் கௌரவத்தை பேணுவதிலும் உறுப்பினர்களிடையே சகோதரத்துவத்துடன் அப் பதவி மூலம் இச் சபைக்கும் அவரை பிரதிநிதித்துவப்படுத்திய மக்களுக்கும் ஆற்றிய சேவைகளுக்கு நன்றி கூறுகின்றேன். இச் சபைக்கு அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்பட்ட தேர்தல் முடிவில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸிற்கும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் சம அங்கத்தவர்கள் இருந்த போதிலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவை குறிப்பாக எனக்கு வழங்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் மும்முரமாக செயற்பட்டு கௌரவ உறுப்பினர் வளர்மதியோடு அம் முயற்சியில் ஈடுபட்டதனால் தான் இன்று இச் சபையின் தவிசாளராக நான் அமர்ந்திருக்கின்றேன். அக் கட்சியின் மேல் வைத்த நம்பிக்கையை தளராத படி இம் முறையும் சபையின் உப தவிசாளராக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதியாக அங்கம் வகிக்கும் சிரேஸ்ட உறுப்பினர் கௌரவ அச்சி முஹம்மட் அவர்களை தெரிவு செய்ததற்காக இச் சபை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கௌரவ உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அவரை தெரிவு செய்ததற்கு இறைவனுக்கு நன்றி கூறியவனாகவும், கௌரவ உறுப்பினர் முன்னால் பிரதித் தவிசாளரான ஜெயச்சந்திரன் அவர்களுக்கு வழங்கப்பட்ட பதவியை அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிக்கும், மக்களுக்கும், இச் சபைக்கும் அவரினால் என்ன செய்ய முடியுமோ அனைத்து முயற்சிகளையும் செய்து முற்றுமுழுதாக 100% அப் பதவியை பிரயோசனப்படுத்தி மக்களுக்கு செய்த சேவைகளுக்கு மீண்டும் நன்றி கூறுகின்றேன்.

LDSP திட்டத்தின் கீழ் நாம் வீரமுனையில் ஒரு சிறுவர் பூங்கா அமைப்பதற்கு ஒரு திட்டத்தை செய்திருந்தோம். அத் திட்டம் சில நிர்வாகப் பிரச்சினைகளினால் எமக்கு முன் கூட்டி அறிவிக்காத ஒரு நிலமையினால் அது நிராகரிக்கப்பட்டது. அம் முழு வேலையிலும் 30% இற்கு மேற்பட்ட செலவு அவ் இடத்தை தயாரிப்பதில் செலவிடப்படுகின்றது என்று நிராகரிக்கப்பட்டிருந்தது. அதை நாம் மீளப் பெற்று அவர்கள் சுட்டிக்காட்டியிருந்த அப் பங்களிப்பை சபையினதும் பொது மக்களினதும் பங்களிப்பாக மாற்றி மீண்டும் சிபார்சு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. அக் காணிக்கான உறுதிப்பத்திரம் கோயில் நிர்வாகத்தினால் எமக்கு தற்போது கையளிக்கப்பட்டிருக்கின்றது. இரண்டு தடவைகள் கோயில் நிர்வாகம் அவர்களின் சொத்துக்களாக இருக்கும் இரண்டு காணிகளையும் சம்மாந்துறை பிரதேச சபைக்கு அன்பளிப்பு செய்ததற்காக சபையின் சார்பிலும் உங்களின் சார்பிலும் அவர்களுக்கு நன்றி கூற வேண்டிய கடமை எனக்கு இருக்கின்றது. இறைவனின் நாட்டத்தில் அத் திட்டம் வெற்றியடையும் போது நிச்சயமாக இனங்களுக்கிடையிலான உறவுகளுக்கு அத்திவாரமாக அச் சிறுவர் பூங்கா அமையும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

நாம் சபையின் அங்கீகாரத்தோடு LLDF யிடம் ஒரு கடனுக்கு விண்ணப்பித்திருந்தோம். அதில் சிபார்சு செய்யப்பட்ட அல்லது அதற்கு அழைக்கப்பட்ட Quotation களின் விபரங்கள் உங்களுக்கு தரப்பட்டிருக்கின்றது. கடன் உதவியை பெறுவதற்கு இச் சபையில் ஒரு சிறு குழுவை அமைத்து அக் குழு Quotation களை பரிசீலித்து தொழில்நுட்ப உதவிகளையும் நாடி மிக விரைவில் முடிவை தருவீர்களானால் ஒரு மாத காலத்திற்குள் அதை நமக்கு நடைமுறைப்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும்.

குப்பைகளை பிரித்துத்தர வேண்டும் என்ற வேண்டுகோள் மக்களுக்கு விடுக்கப்பட்டு ஒரு கிழமையில் 3 தடவைகள் உக்கும் பொருட்கள் சேகரிக்கப்பட்டு ஒரு தடைவ உக்காத கழிவுகள் சேகரிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதில் கௌரவ உறுப்பினர்கள் மக்கள் மத்தியில் இச் செய்தியை கொண்டு சென்று அதனை செயற்படுத்த உதவ வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன். ஏனென்றால் குப்பைகளை உக்குகின்ற குப்பைகளாகவும், உக்காத குப்பைகளாகவும் பிரித்தே எடுக்கப்பட வேண்டும் என்று தற்போது Gazette வெளியிடப்பட்டுள்ளது. இம் முயற்சியில் நாம் வெற்றியடைய வேண்டும். கௌரவ உறுப்பினர்களுக்கு தெரிந்திருக்கும் Compost Yard இல் தயாரிக்கப்படும் Compost இற்கு நல்ல கிராக்கி இருக்கின்றது. பலர் அங்கு சென்று வேளாண்மை செய்வதற்கும் ஒரு அடிக்கட்டு பசளையாக பாவிப்பதற்கு வேண்டுகோள்கள் இருக்கின்றது. எனவே நாம் எமது உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்றால் மக்கள் மத்தியில் குப்பைகள் பிரித்து தரும் போது எமது உற்பத்தியை கூட்டுவதற்குரிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அலுவலக கணனி திருத்தச் செலவு ரூபா 20000.00 குறிப்பிடப்பட்டுள்ளது. மல்வத்தை உப அலுவலகத்தில் உள்ள கணனிகளையும் திருத்துவதற்கு கோரியுள்ளேன். அது இதில் உள்ளடக்கப்படவில்லை. இவை அதனையும் சேர்த்து உள்ளடக்கியதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கணனித் திருத்தத்திற்கு ஒரு Service Contract ஒன்று ஒப்பம் செய்யப்பட்டுள்ளது. இது சபையில் உள்ள சகல கணனிகளையும் Service பண்ணுவதற்கு சபையில் தீர்மானம் எடுத்து செய்யப்பட்டது. ஒவ்வொரு மாதமும் அதற்கான செலவீனம் வரும்.

## தீர்மானம் - 04/25/02

சென்ற மாதம் 2020.02.01 தொடக்கம் 2020.02.29 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/25/03

சபையின் திண்மக் கழிவகற்றல், கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்தல், டெங்கு கட்டுப்பாடு, சோலைவரி அறவீடு, பொதுச் சுகாதாரம் தொடர்பான அறிவித்தல்கள் போன்ற பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும் பொது அறிவித்தல்களை மேற்கொள்வதற்காக Speaker – 02, Mic, Amplifiers கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/25/04

ரெக்டர் RA – 0258, RB – 0640, RA – 2466, 49 - 3938 இலக்க வாகனங்களை திருத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டு விழா நடாத்துவது தொடர்பாக, அரசியல் பிரமுகர்கள் பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட பேச்சுகள் நடாத்த முடியாது, பரிசுகள் வழங்க முடியாது. ஆனால் நாம் பங்குபற்றலாம். ஏதாவது அரசியல் சார்பற்ற ஊழியர்கள், உத்தியோகத்தர்களை வைத்து நிகழ்ச்சிகளை நடாத்தலாம் என்ற தெளிவினை நான் தேர்தல் ஆணையாளரிடம் இருந்து தெளிவைப் பெற்றதன் பின்னர்தான் இத் தீர்மானத்தை முன்வைத்திருக்கின்றேன். இதை எங்கு நடாத்துவது, எப்போது நடாத்துவது என்பது பற்றி உங்கள் கருத்துக்களை கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பிரதேச சபை உறுப்பினர் உட்பட என்றால் அது எந்த அளவுக்கு இருக்கும் என்பதை தெளிவுபடுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பிரதேச சபை உறுப்பினர்களும் கட்சி சார்ந்த அரசியல் வாதிகள் என்பதற்குள் வருகின்றது. தேர்தல் காலத்தில் எந்தவொரு பொது நிகழ்ச்சியிலும் ஒரு பிரதேச சபை உறுப்பினர் பங்குபற்ற முடியாது என்ற கட்டுப்பாடு இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் என். கோவிந்த சாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற வருடம் சித்திரைப் புத்தாண்டு கொண்டாடுவதற்காக வளத்தாப்பிட்டியில் ஒழுங்கு செய்திருந்தோம். தவிர்க்க முடியாத காரணத்தினால் அது பிற்போடப்பட்டது. எனவே இம் முறை சித்திரைக் கொண்டாட்டத்தை வளத்தாப்பிட்டியில் செய்வது சிறப்பாக இருக்கும் என்பது எனது கருத்து ஆகும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சபையில் அமர்ந்திருப்பவர்கள் அரசியல் கட்சியின் ஊடாக வந்திருந்தாலும் கலை கலாசாரத்தின் ஊடாக இணைந்து இருப்பவர்களின் திறமைகளை இச் சந்தர்ப்பத்திலே தடுத்து நிறுத்துவது சிறப்பாக இருக்காது. அரசியல் சார்பான மேடைகளில் பேசுவது, கட்சி சார்பாக வாக்கு கேட்பது போன்றவைகளை தடுக்கலாம். ஆனால் இது விழாவாக இருப்பதனால் இதில் கலைஞர் இருந்தால் அவருக்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போகும் என்பதை இச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் பாடலாம், ஆடலாம் ஆனால் உரையாற்ற முடியாது.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தேர்தல் அபேட்சகராக இருப்பவர்தான் தேர்தல் காலத்தில் கலந்து கொள்ள முடியாது என்றுதான் நான் இதுவரை நினைத்திருக்கின்றேன். அதைத் தவிர தேர்தலில் கலந்து கொள்ளாத அபேட்சகர் அல்லாத எமது கௌரவ உறுப்பினர்கள் கலந்து கொள்வதில் எந்த ஆட்சேபணையும் இல்லை என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவ்வாறான கேள்விகள் வரும் என்றுதான் நான் தேர்தல் உதவி ஆணையாளரிடம் கேட்ட போது அவர் நீங்கள் உரையாற்ற முடியாது, பரிசளிப்பு செய்ய முடியாது, ஆனால் கலந்து கொள்ளலாம் என்று கூறினார். இன்னும் தெளிவு காணவேண்டுமானால் செயலாளர் அவர்களை உத்தியோகபூர்வமாக தேர்தல் ஆணையாளருக்கு எழுதி அதை எழுத்து மூலம் எடுத்து அனுப்பி வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சித்திரைப் புத்தாண்டு தமிழ், சிங்களவர்கள் மட்டுமல்லாமல் முஸ்லிம்களும் பங்குபற்ற இருப்பதால் சென்ற மகளிர் தினத்தையும் கொண்டாட முடியாமல் போய்விட்டது. எனவே 2 நிகழ்வுகளையும் தேர்தல் காலத்தின் பின்னர் நடாத்தலாம் என்பது எனது கருத்து ஆகும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சித்திரைப் புத்தாண்டு நிகழ்வை அதற்குரிய கால கட்டத்தில் செய்வதுதான் சிறப்பாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதனை தேர்தலின் பின்னர் நடாத்தினால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ். நிலுஷ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தேர்தல் காரணமாக இம் மாதம் மகளிர் தினத்தினையும் கொண்டாடவில்லை. இவ் இரண்டு நிகழ்வுகளையும் தேர்தல் முடிந்த பின்னர் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு விழாவாக செய்யலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல் சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவர்களது விழாவை உரிய நேரத்தில் செய்வது சிறப்பாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தேர்தல் காலங்களில் இவ்வாறு சட்டங்கள் வருவது இயல்பு. ஆனால் எந்தப் பிரதிநிதியும், அரசியல் பிரமுகர்களும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளலாம், பேசலாம், பரிசுகள் வழங்கலாம் ஆனால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதுதான் நாம் முகங்கொடுக்கக் கூடிய சிக்கலாக அமையும். அதற்கு மேலாக சித்திரைப் புத்தாண்டு என்பது தேர்தலுக்கு முன்னர் நடாத்தினால் சிறப்பாக இருக்கும் என கருதுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எதிர்வரும் 25 ஆந் திகதி நோன்பு ஆரம்பிப்பதனாலும் அவர்களுடைய விழா ஏப்ரல் மாதத்திற்குரிய விழா என்பதனால் அம் மாதத்திலே நடாத்தி முடிப்பது சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
25 ஆந் திகதி நோன்பு ஆரம்பிப்பதனால் இன்னும் ஒரு மாதம் பிற்போடவேண்டும். உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் சம்மாந்துறை வரலாறு என்ற வைபவம் நடக்கும் போது Election Commissioner Officers வந்து என்னையும், கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களையும் வெளியேற்றினார்கள். இப்படியான நிலமை எமக்கு வரக்கூடாது. சம்மாந்துறை பிரதேச சபை விரும்பியோ விரும்பாமலோ இந் நாட்டின் சட்டதிட்டங்களை மதிக்கும் சபை என்ற நாமம் இருக்கின்றது. அது தொடர்ந்தும் இருக்க வேண்டும். அதனால்தான் சில முடிவுகள் எல்லோரும் விரும்பாத முடிவுகளாக இருந்தாலும் நாம் அதை மதித்தே ஆக வேண்டும். இத் தீர்மானத்தை தமிழ் உறுப்பினர்கள் சேர்ந்து எப்போது செய்வது என்ற ஏற்பாட்டை செய்ய வேண்டும்.

**தீர்மானம் - 04/25/05**
ஏப்றில் மாதம் தமிழ், சிங்கள புத்தாண்டு விழாவினைக் கொண்டாடுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வீ.ஜெயச்சந்திரன் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கலாபூசணம் ஸைன் அவர்கள் சம்மாந்துறை கலை கலாசார பேரவை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட வேண்டிய அவசியம் தொடர்பாக ஒரு வேண்டுகோளை வைத்திருக்கின்றார்கள். இதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்ற கருத்துக்களை நீங்கள் முன்வைப்பீர்களானால் அதற்குரிய

முடிவை எடுக்கலாம். இதற்கு ஒரு குழுவை புதிய உப தவிசாளர் தலைமையில் நியமித்து செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, என்னைப் பொறுத்தவரைக்கும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற கூடுதலான அம்சங்களுக்கு சம்மாந்துறை பிரதேச செயலகத்தினால் அவர்களுக்குரிய நிதிகள் வழங்கப்பட்டு நடைமுறையில் இருக்கின்றது. எனவே இதற்காக சபையின் ஊடாக செலவீடு என்பது தவிர்த்துக் கொண்டால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பிரதேச எல்லைக்குள் பல்லின மக்கள் குறிப்பாக தமிழ், முஸ்லிம் வாழுகின்ற பிரதேசம் ஆகும். எப்போதும் சம்மாந்துறை என்பது ஒற்றுமைக்கான உதாரணமான ஊராக திகழ்கின்றது. அந்த அடிப்படையில் பொறுப்பு வாய்ந்த பிரதேச சபையின் தவிசாளராக இருக்கின்ற தாங்கள் இவ்வாறான சமூகங்களை இணைக்கின்ற சமூக, கலை, கலாசார நிகழ்வுகளுக்கான ஒரு அத்திவாரத்தை உண்மையிலே ஸைன் அவர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் சபை சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு இவ்வாறான கருத்தாளம் மிக்க தூர நோக்குடைய இன ஒற்றுமைக்கான நிகழ்ச்சிகளை நாம் பிரதேச சபையின் சட்டதிட்டங்களுக்கு அமைய ஏற்படுத்த முடியும் என நான் கருதுகின்றேன். அவ் அடிப்படையில் இதை உங்களது தவிசாளர் காலத்திற்குள் விரைவாக அதற்கான குழுவை அமைத்து இதை முன்னெடுக்க வேண்டும் என்று தாழ்மையாக கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கலைஞர்களுடன் தொடர்பு உள்ளவன் என்ற படியிலே உண்மையிலே எமது பிரதேசத்தை சேர்ந்த கலைஞர்கள் கௌரவிக்கப்படும் விதம் குறைவாகவே இருக்கின்றது. பிரதேச செயலகத்தில் சாகித்திய விழா நடாத்தப்பட்டு அக் கால கட்டத்தில் மட்டும் அவர்களுக்கான ஒரு சஞ்சிகை வெளியிடலும், சான்றிதழ் வழங்குதலும் இடம்பெறுகின்றது. ஆனால் அவர்களுக்கு முறையான களம் இல்லை. எனவே இம் முன்மொழிவினை ஏற்று இதற்கும் ஒரு ஏற்பாட்டை எமது சபை மூலம் ஏற்று அவர்களை கண்ணியப்படுத்துவதுடன் எமது பிரதேசத்தின் கலை கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கு ஒரு சந்தர்ப்பமாக அமையும் என நினைக்கின்றேன். எனவே இதை சபை அங்கீகரித்து செயற்படுவது சிறப்பு என கருதுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஸைன் அவர்களின் கடிதத்தின் ஊடாக கலை கலாசாரம் என்பது மட்டுமல்லாமல் இதற்கு சில அம்சங்களும் உள்ளடக்கமாக அடங்கியுள்ளது. இதை நாம் எல்லோரும் சேர்ந்து வேறு ஒரு நாளில் தீர்மானம் எடுத்து இதற்கு ஒரு குழு அமைக்க வேண்டும் என்பது எனது கருத்து ஆகும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, முன்னாள் உப தவிசாளர் கூறியது போல் இதனை செய்வதற்கு என்று பிரதேச செயலகத்தினால் வருடாந்தம் நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றது. அதே நிகழ்ச்சிகளை மீண்டும் நாம் நடாத்தி காலத்தையும் பணத்தையும் வீண்விரயம் செய்யாமல் மக்களுக்கு சேவையாற்ற வேண்டிய எவ்வளவோ சேவைகள் இருக்கின்றது. அதற்காக எமது காலத்தையும், பணத்தையும் செலவு செய்தால் மக்களுக்கு செய்யும் சேவையாக இருக்கும் என்று கூறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல் சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பாரம்பரிய இலக்கியங்களை வெளிப்படுத்துவதில் பிரதேச சபையின் கடமையும் ஆகும். ஏனென்றால் அதிகமாக பழைய நிகழ்வுகள் எல்லாம் மறைந்து போய்விட்டது. அதனை நாம் வெளியில் கொண்டு வருவது என்றால் நாம் அவர்களுக்கு உதவ வேண்டும் என்பது எனது கருத்து ஆகும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் குறிப்பிட்ட சில விடயங்கள் நாம் நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகின்றோம். ஆனால் அதில் உள்வாங்கப்பட்ட ஒன்று பெயர்ப் பலகையிடல் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. கலை கலாசாரம் அழியக்கூடாது. தற்போது எத்தனையோ விடயங்கள் அழிந்து போய் உள்ளன. வருடந்தோறும் கலை கலாசாரத்திற்கு பணம் ஒதுக்கப்பட்டு எமது

கௌரவ உறுப்பினர் சுட்டிக்காட்டியதையும் கவனத்தில் கொண்டு நாம் ஒரு குழு இணைந்து இவ்வாறுதான் பிரதேச சபை என்ற நடைமுறையை எமக்கு பிறகு வருபவர்களும் தொடர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாம் முற்றுமுழுதாக கலை கலாசாரங்களை ஏற்றுக் கொள்ள முடியாத சபையாக இயங்கவில்லை. குறிப்பாக நாம் வருடம் தோறும் நடைபெறுகின்ற வாசிப்பு மாதம், அதே போன்று மரபு ரீதியாக வருகின்ற தமிழ் சிங்கள மக்களுடைய புது வருடம் போன்ற பல்வேறுபட்ட மரபு ரீதியான கலை கலாசார நிகழ்வுகளுக்கு இச் சபை முடியுமான அளவுக்கு உதவி செய்கின்றோம். அதற்காக எல்லாவற்றையும் இச் சபைதான் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதும் குறிக்கோள் அல்ல. இச் சபையினால் நெறிப்படுத்த வேண்டிய பொறுப்புகள் ஏராளம் இருக்கின்றது. நாம் மக்களுக்காக மக்களினுடைய பணிகளை நிறைவேற்றுவதற்காக மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டு அமைக்கப்பட்ட சபையாகும். எனவே சபையினுடைய நிதியை மக்களுக்கு பிரயோசனமாக இருக்கின்ற வகையில் கூடுதலாக செலவீடு செய்ய வேண்டும் என்பது எனது கருத்து. அதற்காக கலை கலாசாரத்திற்கு முற்றுமுழுதாக நான் எதிர்ப்பானவனும் அல்ல. இவ்வாறான நிகழ்வுகளை நடாத்துகின்ற போது அல்லது இது தொடர்பான அமைப்பு அல்லது இயக்கம் நடாத்த எத்தனிக்கின்ற போது தற்போது எம்மிடம் உதவி கோரியிருக்கின்றார்கள். அதே நேரம் அவர்களால் ஒரு நிகழ்வை முன்னெடுத்து நடாத்துகின்ற போது குறிப்பாக இங்கு உள்ள கௌரவ உறுப்பினர்கள் அதே போல் எமது ஊரில் உள்ள தனவந்தர்கள் ஏனைய சமூக சேவை அமைப்புக்கள் இதற்கான நிதிகள் சேகரிக்கப்படும். எனவே சபையினுடைய நிதியையும் கொடுத்து தனிப்பட்ட நிதியிலும் இவர்களுக்கு உதவி செய்து இவ்வாறான ஒரு நிகழ்வை நடாத்துவதோ, அதனை முன்னிறுத்துவதோ எமது சபைக்கு பொருத்தமற்ற விடயம் என்பது எனது கருத்து ஆகும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் குறிக்கப்பட்ட 20 விடயங்களில் எழுத்துருவமான ஆவணங்கள், கோவைப்படுத்தல்கள் எமது சமூகத்திற்கு அவசியம் என நினைக்கின்றேன். அந்த வகையில் இதை நடைமுறைப்படுத்துவதற்காக இதன் ஆக்கபூர்வமான ஏனைய விடயங்களையும் கவனிப்பதற்கு எமது சபை மூலமான ஒரு குழுவை நியமித்து அதன் மூலமாக ஒரு தெளிவை பெற்றதன் பின்னர் அதனை அமுல்படுத்துவதா? இல்லையா? என்ற தீர்மானத்தை எடுக்கலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பொதுவாக எமது சபையின் அங்கத்தவர்கள் எல்லோரும் ஒரு வகையில் இதனை ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்துக்கள் நிலவுகின்றது. நாம் அவசரமாக இதற்கான முடிவுகளை எடுக்க முடியாது. ஆழமாக யோசித்து பிறிதொரு நாளில் இது தொடர்பாக ஆராய்ந்து இதற்குரிய முடிவை எடுக்கலாம் என்பது எனது கருத்து ஆகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்கள் எல்லோரினது கருத்துக்களை உள்வாங்கியவனாக, இதில் 3 அம்சங்கள் இருக்கின்றது. முதலாவதாக காப்பகங்கள், இது 2012ம் ஆண்டு வாசிப்பு மாதத்தில் இருந்து அமீர் அலி நூலகத்தில் இவ் ஊரின் பழய ஆவணங்கள், வெளியீடுகள் எல்லாவற்றையும் ஒரு காப்பகமாக நாம் வைத்து வருகின்றோம். இதனால் வருடாந்தம் அமீர் அலி நூலகத்திற்கு விருதும் வழங்கப்படுகின்றது. இது சம்மாந்துறை மக்களினால் தெரிவு செய்யப்பட்ட சபை ஆகும். ஒரு காப்பகம் செய்ய வேண்டியது காலத்தின் தேவை. ஏனென்றால் பிள்ளைகளுக்கு சரித்திரம் தெரியாது. சென்ற சபைதான் முதன் முதலாக சம்மாந்துறையில் பிரதேச சபை தவிசாளர்களினதும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் படங்களை சேர்த்து காட்சிப்படுத்தியது. அதே போல் நாமும் ஒரு காலத்தில் சரித்திரமாக மாறும் போது இவைகள் இருக்க வேண்டும். அப் பொறுப்பு இச் சபைக்குதான் இருக்க வேண்டும்.

இரண்டாவது விழாக்கள் இதில் ஊக்குவிப்புகள், கௌரவிப்புகளுக்கு மேலதிகமாக குழந்தைகளை ஊக்குவிப்பது ஆகும். சன சமூக நிலையங்கள் இருக்கின்றது. இதன் மூலமாக கலை நிகழ்ச்சிகளை நடாத்தி ஊக்குவித்தல். மூன்றாவதாக வெளியீடு, பிரதேச சபை நூலகங்கள் சேர்ந்து இலக்கிய சபை ஒன்றை செய்து அவர்கள் 3 மாதத்திற்கு ஒரு தரம் பிரசுரம், கவிதைகள், எழுத்துக்கள், பாரம்பரியங்களை வெளியிடுதல் போன்றவைகள் ஆகும். புதிதாக நியமிக்கப்பட்ட கௌரவ உப தவிசாளரின் தலைமையின் கீழ் ஆர்வமுள்ள அங்கத்தவர்களை சேர்த்து ஒரு திட்டம் ஒன்றை தயாரித்து அடுத்த சபையில் சமர்ப்பிக்க வேண்டும்.

ஹிஜ்ரா பஸ் தரிப்பு நிலையம் முழுமையாக மூடியிருப்பதால் சிலர் நாகரீகமற்ற முறையில் பகலில் தூங்குவதும், இரவு நேரங்களில் தங்குமிடமாக மாறுவதும், மலம் கழித்தல் போன்ற விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகள் வருகின்றது. இதனால் இருபக்கங்களையும் திறந்து அதனை திருத்தம் செய்ய வேண்டும். பொலிஸிற்கு அறிவித்தும் அவர்கள் நடவடிக்கை எடுப்பதாக இல்லை. இதனால் அதனை திறந்து மாற்றினால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

### தீர்மானம் - 04/25/06

ஹிஜ்ரா பஸ் தரிப்பு நிலையம், வீரமுனை பஸ் தரிப்பு நிலையம் போன்றவற்றின் மறைப்புக்களை அகற்றி மாற்றுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வீ.ஜெயச்சந்திரன் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/25/07

சேதனப் பசளையை தரம் உயர்த்துவதற்கான கனிய பொருட்களை (Dolemaid) கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களின் பிரேரணை கிராம சேவகர் பிரிவை பிரிவனை செய்தல் தொடர்பாக, நான் எல்லோருக்கும் 51 கிராம சேவகர் பிரிவுகளையும் அதன் பரப்பளவையும், சனத்தொகைகளின் எண்ணிக்கை, குடும்பங்களின் எண்ணிக்கைகளைக் கொண்ட ஒரு தகவல் தந்திருக்கின்றேன். அதில் சராசரியாக பார்த்தால் சம்மாந்துறையின் சனத்தொகையில் ஒரு சதுர கி.மீ இற்கு 594 நபர்கள் வாழ்கின்றார்கள். இதில் 170 குடும்பங்கள் வாழ்கின்றார்கள். இந் நாட்டில் 25 மாவட்டங்கள் ஆகும். அதில் 14022 கிராம சேவகர் பிரிவும், 331 பிரதேச செயலாளர் பிரிவும் இருக்கின்றது. ஒரு மாவட்டத்திற்கு சராசரியாக 560 கிராம சேவகர் பிரிவும், ஒரு பிரதேச செயலாளர் பிரிவிற்கு சராசரி 42 கிராம சேவகர் பிரிவும் காணப்படுகின்றது. நாம் ஒரு திட்டத்தினை வைக்கும் போது National Average எப்படி பார்ப்பார்கள் என்று தெரியாது. சென்னல் கிராமத்தை பொறுத்தவரயில் பாரிய பரப்பு ஆகும். எமது முன்மொழிவுகள் ஆக்கபூர்வமாக இவைகளையும் உள்வாங்கியதாக இருக்க வேண்டும் என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, பிரேரணையாக முன்மொழியப்பட்ட சென்னல் கிராமம் - 02 ம் பிரிவு சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட 2வது மிகப் பெரிய சனத்தொகையையும், நிலப்பரப்பளவையும் கொண்ட கிராம சேவகர் பிரிவாகும். இப் பிரிவு கிழக்கு எல்லையாக மலையடிக் கிராமத்தையும், வடக்கு எல்லையாக பௌஸ் மாவத்தை வீதியையும், தெற்கு எல்லையாக உடங்கா ஆற்றையும், மேற்கு எல்லையாக மல்வத்தை – 03 சேனவட்டையையும் பிரதானமாக கொண்டது. மொத்தமாக 2.82 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டது. மொத்தமாக 2019 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 955 குடும்பங்களையும், 3408 சனத்தொகையையும் கொண்டதாகும். மொத்த வாக்காளர் 2019 ஆம் ஆண்டின் கணக்கீட்டின் படி 1927 ஆகும். மொத்தம் 96 பாதைகள் இதில் 26 பாதைகள் புணரமைக்கப்பட்ட பாதைகள், 4 வீடமைப்புத் திட்டங்களைக் கொண்டதாகும். வருடம் ஒன்றிற்கு பிள்ளைகள் பிறப்பு வீதம் 150 இற்கு மேலாக உள்ளது. சமுர்த்திப் பயனாளிகளாக 580 குடும்பங்களும், பொதுசன மாதாந்த கொடுப்பனவு பெறுகின்ற குடும்பங்களாக 172 குடும்பங்களும் உள்ளது. இக் கிராம சேவகர் பிரிவில் ஆரம்பகட்ட வைத்தியசாலைகள் ஒன்றும், பாடசாலைகள் 2 உம், பள்ளிவாசல்கள் 07 உம், மையவாடி ஒன்றும் காணப்படுகின்றது. இக் கிராம சேவகர் பிரிவின் அவல நிலை அதாவது ஒரே கிராம சேவகர் பிரிவில் 2 வாக்கெடுப்பு நிலையங்கள் உள்ளது. இதே பிரதேச செயலக

எல்லைக்குள் 110 குடும்பங்களைக் கொண்ட கிராம சேவகர் பிரிவும், 125 குடும்பங்களைக் கொண்ட கிராம சேவகர் பிரிவும் உள்ளது. மேலும் கௌரவ தவிசாளர் அவர்களே இக் கிராம சேவகர் பிரிவின் அவல நிலை சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பொதுமகன் தன்னுடைய தேவையை நிவர்த்தி செய்வதற்காக அலுவலக தேவைக்காக செல்லுகின்ற போது கிராமத்தின் எல்லைக்குள் ரூபா 250/= முச்சக்கரவண்டிக்கு செலுத்தி செல்லக் கூடிய ஒரு அவல நிலை இருக்கின்றது. அதே வேளை ஒரே நாளில் அவருடைய தேவையை முடித்துக் கொள்ள இயலாத நிலையும் இருக்கின்றது. எனவே அம் மக்களுடைய நிலமையைக் கருத்திற் கொண்டு பிரதேச மக்களின் ஆலோசனையுடன் அப் பிரதேசத்திற்குரிய கிராம சேவகரின் ஆலோசனையைப் பெற்று இக் கிராம சேவகர் பிரிவினை 04 பிரிவுகளாக பிரிக்க வேண்டும் என்று திட்டமிட்ட போது கிராம சேவகர் பிரிவிற்கான மொத்த குடும்பங்களின் எண்ணிக்கையில் குறைவு நிலை ஏற்படுகின்ற காரணத்தினால் தற்போது அதனை 03 ஆகவும் எதிர்வருகின்ற காலத்தில் 04 ஆக பிரிக்கக் கூடிய வகையிலும் தற்காலிகமான ஒரு வரைபு படத்தில் காட்டப்பட்டவாறு முதலாவதாக சென்னல் கிராமம் 02 இருக்கின்ற பிரிவில் கிழக்கு எல்லையாக பிலாவடி வீதியையும், வடக்கு எல்லையாக பௌஸ் மாவத்தை வீதியையும், தெற்கு எல்லையாக உடங்கா ஆற்றையும், மேற்கு எல்லை சேனவட்டை மல்வத்தை – 03 பிரதேசத்தையும் கொண்டது. பிரிக்கப்பட்ட எல்லையின் அளவு மொத்த அளவில் 0.91 சதுர கிலோ மீற்றர் ஆகும். இதில் வாழுகின்ற மொத்த குடும்பங்கள் 314 உம், சனத்தொகை 1160, பாதைகள் 22, செப்பனிடப்பட்ட பாதைகள் 04, மக்கள் தேவைக்காக பயன்படுத்த முடியாத பாதைகள் 08 உம் காணப்படுகின்றது.

அதே போன்று இரண்டாவதாக பிரிக்கப்பட்டிருக்கின்ற பிரிவின் மொத்த அளவு 0.73 சதுர கிலோ மீற்றர் ஆகும். இதில் மொத்த குடும்பங்கள் 322, சனத்தொகை 1018, பாதைகள் 31, செப்பனிடப்பட்ட பாதைகள் 02, ஏனைய 27 பாதைகளும் மிகவும் மோசமான நிலையிலே அமைந்திருக்கின்றது. இப் பிரிவிற்கான எல்லையாக வடக்கில் பௌஸ் மாவத்தை வீதியும், கிழக்கு எல்லையாக அப்ரார் பள்ளி வாசலினுடைய வீதியும், தெற்கு எல்லை உடங்கா ஆற்றையும், மேற்கு எல்லை பிலாவடி வீதியுமாக அமைந்துள்ளது. மூன்றாவதாக பிரிக்கப்பட்டிருக்கின்ற பிரதேசத்தின் மொத்த அளவானது 1.18 சதுர கிலோ மீற்றர் ஆகும். இதில் மொத்த குடும்பம் 339, சனத்தொகை 1230, பாதைகள் 43, செப்பனிடப்பட்ட பாதைகள் 11, ஏனைய பாதைகள் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இப் பிரிவினுடைய எல்லையாக வடக்கில் பௌஸ் மாவத்தை வீதியும், கிழக்கு எல்லையாக S வாய்க்கால் வீதியும், தெற்கு எல்லை உடங்கா ஆறுமாக, மேற்கு எல்லை அப்ரார் பள்ளிவாசலினுடைய வீதியுமாக பிரிக்கப்பட்டுள்ளது.

இதன் எல்லை பிரிக்கப்பட்டிருக்கின்ற போது இவ்வாறான திட்டத்தின் அமைவுக்கு அடங்கலாக இதனை நான்காவது பிரிவாக பிரிக்க எத்தனிக்கின்ற போது சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குள் உட்பட்ட புளக் ஜே மேற்கு பிரிவில் இருக்கின்ற தென்னம்பிள்ளைக் கிராமம், அதே போன்று வெட்டுக்காட்டுப் பிரதேசம், 20 வீட்டுத்திட்டம், 40 வீட்டுத்திட்டத்தில் இருக்கின்ற தக்வா பள்ளிவாசலுடைய வீதியை எல்லையாக வைத்து 04 வது கிராம சேவகர் பிரிவாகவும் அதனை பிரிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. எனவே கௌரவ தவிசாளர் அவர்களே, இப் பிரதேசத்தில் வாழுகின்ற மக்களின் அவல நிலையைக் கருத்திற் கொண்டும், இப் பிரதேசத்தினுடைய அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காக எவ்வாறாயினும் இப் பிரதேசங்களை பங்கிட வேண்டும். இதே போன்று சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குள் கூடுதலான கிராம சேவகர் பிரிவுகளை பிரிவினை செய்ய வேண்டி இருக்கின்றது. எதிர்காலத்திலே சென்னல் கிராமம் 01 உம் இவ்வாறு பிரிவு செய்யப்பட வேண்டிய தேவை இருக்கின்றது. என்னுடைய வட்டாரத்திற்குட்பட்ட கிராம சேவகர் பிரிவு என்பதால் சென்னல் கிராமம் 02 ஆம் பிரிவினை மட்டுமே இத் திட்ட வரைபிற்குள் உள்ளடக்கி இருக்கின்றேன். இதனை ஏற்றுக் கொண்டு சபையினுடைய தீர்மானமாக கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் இதனை ஏற்று நிறைவேற்றி இதனுடன் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இதனை தெளிவுபடுத்துமாறு கௌரவ தவிசாளர் அவர்களை பணிவாக வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களது வேண்டுகோளை கட்டாயம் எமது பிரதேச சபையினால் எது செய்ய வேண்டுமோ அதை செய்ய வேண்டும் என்றும், நான் இப் பிரதேச சபையின் கன்னியத்திற்கும், மதிப்பிற்கும், கௌரவத்திற்கும் உரிய அனைத்து கௌரவ உறுப்பினர்களாலும் இப் பிரதேச சபையின் உப தவிசாளராக தெரிவு செய்யப்பட்டு அதற்கான உரையை என்னால் ஆற்ற முடியாமல் சென்று விட்டேன். எனவே இச் சபையில் இவ் உரையாற்றுவதற்கு இவ் விடயத்தின் பிற்பாடு எனக்கு அனுமதி வழங்குமாறு கேட்டு எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் எடுத்துக் கொண்ட முடிவு சிறந்தது என்றும், அப் பிரதேசம் இளம் வயதில் இருந்து நன்றாக தெரியும். அது மிகவும் விசாலமானது ஆகும். அவ் இடத்தில் வாழும் மக்கள் சுகாதாரம், அவர்களுக்கான அபிவிருத்திகள் போன்ற பல வகைகளிலும் சிரமப்படுகின்றார்கள். அப் பகுதியில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் கடமை புரியும் வெளிக்கள் உத்தியோகத்தரான சுகாதார வைத்திய பரிசோதகர், பொதுச் சுகாதார மருத்துவ மாது என்பவர்களும் சிரமப்படுகின்றார்கள். ஏனென்றால் அவர்களுக்கான சனத்தொகை பிரித்து வழங்கப்படும் போது கிராம சேவகர் பிரிவை வைத்து பிரிக்கப்படுகின்றது. அத் தூரம் பார்க்கப்படுவதில்லை. எங்களுக்கு கிராம சேவகர் மட்டத்தில் தூரங்கள் வழங்கப்படுமானால் அவ் இடத்திற்கு மேலதிகமான பொதுச் சுகாதார மருத்துவ மாதுவையும், சுகாதாரப் பரிசோதகரையும் போட முடியும். இவ்வாறான இடங்கள் பிரிக்கப்படாமல் ஒன்றாக சேர்க்கப்பட்டிருப்பதனால் எமது பொருளாதார நிலமைகளும் பாதிக்கப்படுகின்றது. ஏனென்றால் அவ் இடம் ஒரு கிராம சேவகர் பிரிவாக பிரிக்கப்படும் போது கிராமிய எழுச்சித் திட்டம், சனசமூக நிலையங்கள் வழங்கப்படும் இட ஒதுக்கீடுகளுக்கான இடங்கள் வழங்கப்படுதல் போன்றவைகள் முன்கூட்டி செல்ல முடியும். ஆனால் தற்போது இருக்கும் கிராம சேவகர் பிரிவு இடையில் வெட்டுக்காட்டுப் பகுதியில் இருந்து ஒரு மலை வருவதாலும், சென்னல் கிராமத்தில் ஒரு மலை வருவதாலும் மக்கள் செல்லுவதற்கு தூரமாக இருக்கின்றது. அங்கு அமைந்திருக்கும் பாடசாலைக்கு மாணவர்கள் செல்லும் போது சிரமத்தை எதிர்நோக்குகின்றார்கள். எமது பாதை அபிவிருத்தி என்பது அவ் இடத்தில் பின்தங்கியே காணப்படுகின்றது. எனவே அவ் இடத்தில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கும், சுகாதார வசதிகளை மேம்படச் செய்வதற்கும் பொருத்தமாக இருக்கும் என்பதையும் இதற்கு எனது பூரண சம்மதத்தினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் முன்வைத்த பிரேரணை இச் சபைக்கு மாத்திரமல்ல இவ் ஊருக்கும் அவசியமான ஒன்று ஆகும். எனவே ஒரு கிராம சேவகர் பிரிவின் எல்லைக்குள் அரசாங்கத்தின் அபிவிருத்திகளும், சேவைகளும், ஏனைய நிகழ்வுகளும் மேற்கொள்ளப்படுகின்ற நேரத்தில் இங்கு இருக்கின்ற மக்களுக்கு இது சென்றடைவதில் மிகவும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். எனவே இவ் விசாலமான கிராம சேவகர் பிரிவை கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களது திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்வது, அதற்கான தீர்மானத்தை எடுப்பது எமது கடமை ஆகும். நாம் மக்கள் பிரதிநிதியாக இருப்பதனால் நாம் இதனை முன்னெடுப்பது மிகவும் சிறப்பாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களினால் முன்வைக்கப்பட்ட இப் பிரேரணையை வரவேற்கின்றேன். அதற்கு இச் சபையினால் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு உரிய இடங்களுக்கு அனுப்பி வைப்பதோடு எதிர்காலத்திலே கல்லரிச்சல் - 02 உம் இவ்வாறான நிலமையை எதிர்கொள்ளக்கூடிய பிரதேசமாக இருக்கின்றது. அதில் கிட்டத்தட்ட சனத்தொகைகள் 3200, குடும்பங்கள் 820 காணப்படுகின்றது. இப் பிரதேசத்திற்குரிய கௌரவ உறுப்பினர்களும் இவ்வாறான பிரேரணையை செய்து அதனை எவ்வாறு பிரிக்கலாம் எமது காலத்திலே பிரேரணையாக முன்வைத்து செய்தால் மக்களுக்கு நாம் செய்யக்கூடிய சேவையாக இருக்கின்றது. அத்துடன் கௌரவ முன்னாள் உப தவிசாளர் அவர்கள் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் வளத்தாப்பிட்டி – 01 நிலப்பரப்பை பார்த்தால் 32.16 சதுர கிலோ மீற்றர் ஆகும். அங்கு இருக்கின்ற குடும்பங்கள் 1080 ஆகும். அதே நேரம் வளத்தாப்பிட்டி – 02 யை பார்க்கும் போது 92 குடும்பங்கள் 8.5 சதுர கிலோ மீற்றர் இல் இருக்கின்றார்கள். இது சமனான பகிர்வாக இல்லாத படியினால் வளத்தாப்பிட்டி – 01 இல் இருக்கின்ற சில எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டு வளத்தாப்பிட்டி – 02 உடன் சேர்க்கப்பட வேண்டிய தேவையும் இருக்கின்றது. எனவே அதனை கருத்திற் கொண்டு எதிர்வரும் காலங்களிலே எல்லை நிர்ணய சபைக்கு பரிந்துரைக்க வேண்டிய விதத்தில் வளத்தாப்பிட்டி – 01, வளத்தாப்பிட்டி – 02 எல்லைகள் மறுசீரமைக்க வேண்டிய கருத்தை முன்வைப்பதோடு, சென்னல் கிராமம் - 02 இன் முன்மொழிவை சபை சார்பாக நிறைவேற்றி உரிய இடத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களின் முன்மொழிவு வரவேற்கத்தக்கது, வளத்தாப்பிட்டி தொடர்பாக கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் ஒரு கருத்தை தெரிவித்தார். இவ் வளத்தாப்பிட்டியின் 1080 குடும்பங்கள் என்பது ஏரக்குறைய 2,3 வருடங்களுக்கு முற்பட்ட சனத்தொகை ஆகும். தற்போது இன்னும் அதிகரித்திருக்கின்றது. இதனை

நாங்கள் 02 பிரிவுகளாக பிரிக்க வேண்டும் என்று ஒரு முன்மொழிவை ஆணைக்குழுவிற்கு முன்வைத்தோம். ஆனால் ஆணைக்குழுவிலே தெரிவிக்கப்பட்ட கருத்து என்னவெனில் ஒரு கிராம சேவகர் பிரிவிற்கு குறைந்தது 250 இற்கும் 500 இற்கும் இடைப்பட்ட குடும்பங்கள் இருக்க வேண்டும். அவ்வாறு 500 அளவில் இருக்கும் எந்த கிராம சேவகர் பிரிவிற்கும் பிரித்து கொடுக்கப்படமாட்டாது. இருப்பினும் அவ் இடத்தில் கூறியது 1000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இருக்கின்றது அதை பிரித்துத் தாருங்கள் என்று அண்மையில் ஒரு முன்மொழிவை செய்தோம். வளத்தாப்பிட்டியை 03 பிரிவுகளாக பிரிப்பதற்கு விசேடமாக இஸ்மாயில்புரம் இன்று தற்பொழுது முஸ்லிம் சகோதரர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எதிர்வரும் காலங்களிலே அவர்களது சேவைகளை அவர்கள் இலகுவாக செய்து கொள்ளவேண்டும்.

எனவே அதனை ஒரு கிராம சேவகர் பிரிவாகவும், புதிய வளத்தாப்பிட்டி பள்ளவெளியின் ஒரு பகுதியை இணைத்து புதிய வளத்தாப்பிட்டி கிராமத்தினை ஒரு பிரிவாகவும் மற்றும் பழைய வளத்தாப்பிட்டி மல்வத்தை பள்ளவெளியின் ஒரு பகுதியை இணைத்து பழைய வளத்தாப்பிட்டியை ஒரு கிராம சேவகர் பிரிவாகவும் 03 பிரிவாக பிரித்து தருமாறு ஒரு முன்மொழிவை செய்திருக்கின்றோம். அங்கு வரும் கிராம சேவகர் உத்தியோகத்தர் கூட தங்களது கடமைகளை செய்வதில் தாமதங்கள், தவறுகள் போன்ற பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். அவர்கள் குறிப்பிடுகின்ற விடயம் இது பெரிய பிரிவு இதனை எவ்வாறு சமாளிப்பது என்ற கருத்தை தெரிவிக்கின்றார்கள். எமது பிரதேச சபையை பொருத்தளவு கல்லரிச்சல் - 02 கிராம சேவகர் பிரிவும் ஒரு பெரிய கிராம சேவகர் பிரிவாக இருக்கின்றது. இவ்வாறான பிரிவுகள் பிரித்துக் கொடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் செய்யப்பட வேண்டும். சென்னல் கிராமம் முன்மொழிவு செய்யப்படுகின்ற போது இவ் வளத்தாப்பிட்டி கிராம சேவகர் பிரிவினையும் மனதில் நிறுத்தி முன்மொழிவை செய்தால் சிறப்பாக இருக்கும் என கருதுகின்றேன். வளத்தாப்பிட்டி – 02 கிராம சேவகர் பிரிவு என்பது மல்லிகைத் தீவு கிராம சேவகர் பிரிவாகும். குறிப்பிட்ட வயல் சூழலின் மத்தியில் அமைந்திருப்பதால் அவ் வயலையும் அக் கிராமத்தையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. எனவே அதனுடன் இப் பிரதேசங்களை இணைப்பது என்பதை விட இப் பிரதேசத்தை மூன்றாக பிரித்து இதனை 03 கிராம சேவகர் பிரவாக மாற்றுவது சிறப்பாக இருக்கும் என கருதுகின்றேன். அத்துடன் கௌரவ உறுப்பினர் அவர்களின் முன்மொழிவை ஏகமனதாக ஆதரிக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

உங்கள் எல்லோரினது கருத்துக்களையும் உள்வாங்கியவனாக, எமது கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் அவர்கள் கூறியவாறு ஒரு மாவட்டத்திற்கு இவ்வளவுதான் இருக்க வேண்டும், ஒரு மாகாணத்திற்கு இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்ற Guideline இருக்கின்றது. சனத்தொகைகள் கூடக்கூட சனத்தொகையை கணக்கெடுப்பதில்லை. உலக வங்கி இந் நாட்டின் நிர்வாகச் செலவு கூடிக்கொண்டே செல்கின்றது. நாம் முன்மொழிவை செய்தால் கூட அங்கீகரிப்பதில்லை. சனத்தொகை பெருகக்கூடிய வளங்கள் உள்ள பிரதேசங்களை பிரிப்பதில் ஒரு சவால் இருக்கின்றது. சம்மாந்துறையின் பழைய பட்டின சபை எல்லைக்குள் சனத்தொகைகள் கூடுவதற்குரிய வாய்ப்புகள் குறைவு. ஆனால் கிராமிய பகுதிகளில் சனத்தொகை அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றது. அப்படியான இடங்களுக்கு நாம் முன்மொழிவுகளை செய்யலாம் ஆனால் இவைகள் ஆணைக்குழு ஒன்று உருவாகின்ற போதுதான் கவனத்தில் கொள்ளப்படும். இதை ஒரு தீர்மானமாக எடுத்து அங்கத்தவரினால் முன்வைக்கப்பட்ட தகவல் எல்லாவற்றையும் இணைத்து பிரதேச செயலாளர் இற்கும், மாவட்ட செயலாளர் இற்கும் இதை சபையின் முன்மொழிவாக அனுப்பி வைப்பதோடு மற்ற உறுப்பினர்களும் இவ்வாறான தகவல்களை சேர்த்து அப் படங்களை வரைந்து முன்வைக்கும் போது நாம் அதை உத்தியோகபூர்வமான பிரேரணையாக எடுத்து உரிய இடங்களுக்கு சமர்ப்பிக்கலாம்.

**தீர்மானம் - 04/25/08**

சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட செந்நெல் கிராமம் - 02 கிராம சேவகர் பிரிவினை 02 பிரிவுகளாக பிரிப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம்.மாஹிர் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் ஒரு கட்டத்திலே பொது நிர்வாகத்தவரிடம் தொடர்பு கொண்டு இவ்விடயம் தொடர்பாக பேசிய போது எனக்கு ஒரு ஆலோசனை வழங்கப்பட்டது. முதலாம் கட்டமாக பிரதேச செயலாளரை தொடர்பு கொண்டு பெரிய கிராம சேவகர் பிரிவானால் அதனை நிர்வாகப்படுத்த இன்னுமொரு கிராம சேவகர் உத்தியோகத்தரை Acting ஆக செயற்படுத்துவதற்கான ஒரு ஏற்பாட்டினை செய்து வந்தீர்களானால் எதிர்காலங்களில் அது இயல்பாகவே கிராம சேவகர் பிரிவாக உள்வாங்கப்படக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். எனவே இம் முன்மொழிவை இதற்குள் சேர்த்தால் சிறப்பாக இருக்கும். அதில் வளத்தாப்பிட்டி, சென்னல் கிராமம் இரண்டையும் இணைத்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இப் பிரேரணை இப் பிரிவுகள் எல்லை நிர்ணயக் குழுவினால் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் இம் மக்களின் அன்றாட தேவைகளைக் கருதி சென்னல் கிராமம் - 02 இற்கும், வளத்தாப்பிட்டி – 01 இற்கும் மேலதிகமான கிராம சேவகர்களையும், சமூர்த்தி உத்தியோகத்தர்களையும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் நியமித்து மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு உதவ வேண்டும் என இச் சபை தீர்மானிக்கின்றது என்று அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இச் சபைக்கு உப தவிசாளராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் அச்சி முஹம்மட் அவர்கள் ஒரு வேண்டுகோள் விடுத்தார் ஆனால் அதை அவர் அக் கதிரையில் இருந்து பேசும் போதுதான் அது உத்தியோகபூர்வமாக பதவியை ஏற்றுக்கொண்டு செய்வதாக இருக்கும். கௌரவ உறுப்பினராக அவ் உரையை ஆற்றாமல் உத்தியோகபூர்வமாக அப் பதவிக்கான கதிரையை பாரம் எடுக்கும் நாளில் தேவை என்றால் விசேடமாக உப தவிசாளர் வரவேற்பு அமர்வாக செய்து அக் கதிரையில் இருந்து அவ் உரையை கேட்க விரும்புகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எல்லைப் பிரிவு பிரகடனம் செய்யப்பட்டது 2017 ஆம் ஆண்டு உள்ளக உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி மாகாண சபையினால் வெளியிடப்பட்ட சுற்றுநிரூபத்தை வைத்து செய்திருந்தோம். அதனால் கிராம சேவகர் பிரிவினை 4 ஆக பிரிப்பதை நிறுத்தி 03 ஆக பிரித்தோம். ஏனென்றால் அவர்களது கட்டுக்கோப்புக்குள் இருந்த குடும்ப எண்ணிக்கையை கருத்திற் கொண்டு என்னால் முன்மொழியப்பட்ட பிரேரணையை ஏகமனதாக நிறைவேற்றியதற்காக கௌரவ தவிசாளர் உட்பட கௌரவ உறுப்பினர் அனைவருக்கும் நன்றி கூறியவனாக,

கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த அமர்வு மிக நீண்ட நேரம் எடுத்ததனால் நான் சில கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டி இருந்தது. ஆனால் நேரம் போதாமையினால் அதனை நான் நிறுத்திவிட்டேன். இச் சபை ஆரம்பிக்கப்பட்ட முதலாவது சபையிலே கௌரவ தவிசாளர் அவர்களின் பணிவான வேண்டுகோளின் பிரகாரம் இச் சபையிலே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றேன். அதாவது இன்னுமொரு வட்டாரத்திற்குள் ஏனைய உறுப்பினர்கள் எந்தவிதமான தேவைக்காகவும் செல்லக்கூடாது. அவ்வாறு செல்வதாக இருந்தால் கௌரவ தவிசாளரினுடைய அனுமதி அல்லது அவ் வட்டாரத்திற்குரிய உறுப்பினரது அனுமதியைப் பெற்று செயற்பட வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை முன்வைத்தீர்கள். அச் சபையிலே அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்று நினைக்கின்றேன். எனவே என்னுடைய வட்டாரத்தில் இருக்கின்ற தேவைகள் என்ன என்பதை 2018 ஆம் ஆண்டு சபைக்கு வந்து 03வது சபையிலே தங்களது ஆலோசனையின் படி சில வரைபுத் திட்டங்களை தந்திருந்தேன். அதில் ஒன்றுதான் என்னுடைய வட்டாரத்தில் உள்ள மல்காம்பிட்டி கிராம சேவகர் பிரிவில் உள்ள மல்காம்பிட்டி பள்ளிவாசலை முடியுமானவரை எவ்வாறு எமது சபையினால் மேற்கொண்டு செய்ய வேண்டும் என்று உங்களிடம் ஒரு முன்மொழிவை தந்திருந்தேன்.

அதே போல் இச் சபைக்கு உறுப்பினராக வருவதற்கு முன் நான் நினைக்கின்றேன் 2016 ஆம் ஆண்டு திடீர் அனர்த்த முகாமைத்துவ மீள் குடிற்ேற அமைச்சினால் கௌரவ முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மாஹிர் அவர்களுடைய முயற்சியினால் அப் பிரதேசத்திலே 15 வீடுகளை கட்டி அங்கு இருக்கின்ற மக்களை குடியமர்த்துவதற்காக ஒரு முடிவினை எடுத்த போது அதற்கு அப் பிரதேசத்திலே இருந்த மக்கள் ஆதரவினை தரவில்லை. அவர்கள் தற்போது அங்கு குடியிருக்க முடியாது என்ற ஒரு கருத்தை முன்வைத்தார்கள். என்னைப் பொருத்தவரைக்கும் நான் சாதாரண குடும்பத்திலே பிறந்து வளந்தவன் என்னால் முடிந்தவரை எல்லோரையும் கௌரவிப்பவன்,

மதிப்பவன். எல்லோரது கருத்துக்களுக்கும் மதிப்பளிப்பவன். அதனை என்னுடைய இயலாமையாக யாரும் எந்த கௌரவ உறுப்பினரும் பயன்படுத்த முடியாது. என்னுடைய வட்டாரத்திலுள்ள தேவைகளை இன்ஷா அல்லாஹ், அல்லாஹ்வின் உதவியோடு என்னால் அதனை முன்னெடுக்க முடியும். இதை செய்வதற்கு இன்னுமொரு உறுப்பினருடைய உதவியை நாட வேண்டிய தேவை இல்லை. எனக்கு தெரியாமல் தயவு செய்து கௌரவ உறுப்பினர்கள் நிறுத்த வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள் ஆகும்.

என்னுடைய கால் சுகயீனம் இல்லாததனால் 12ம் மாதம் நடைபெற்ற சபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்கவில்லை. அந் நேரம் நாட்டிலே மிகப் பெரிய அனர்த்த சூழ்நிலை ஏற்பட்டிருந்த போது என்னுடைய வட்டாரத்திலுள்ள வீதிகளை புணரமைப்பதற்கோ அல்லது அவ் வேலைகளை செய்வதற்கோ கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களால் ஒரு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதே போன்று இச் சபை ஆரம்பித்ததில் இருந்து ஏரத்தாள 23 சபைகளிலும் என்னுடைய உரையாடலிலே திண்மக் கழிவு அகற்றுகின்ற விடயம் தொடர்பாக உரையாடி இருப்பேன். என்னைப் பொருத்தவரைக்கும் சபையிலே தார்மீக போராட்டம் என்றுதான் கருத முடியும். ஏனென்றால் இவ்வளவு காலமும் அப் பிரதேசத்திற்கு சென்னல் கிராமம் - 02, புளக் ஜே மேற்கு – 01 பிரதேசங்களுக்கு எமது திண்மக் கழிவகற்றுதல் சேவை இடம்பெறவில்லை. கௌரவ தவிசாளர் அவர்களிடம் இச் சபையிலே ஒவ்வொரு தடவையும் கூறியதற்கமைவாக என்னுடைய கருத்தினை அவர் மதிப்பில் கொண்டு அச் சேவையை செய்வதற்காக குறைந்த பட்சம் வாரத்தில் ஒரு நாள் செய்வதற்கு அனுமதி தந்திருந்தார். அது கிராமப்புரம் என்ற வகையில் எமது கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்களுக்கு ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை இருந்தது. கடந்த சபையிலே அவர் சென்னல் கிராமத்தில் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான வாகனத்தையோ, நேரத்தையோ, செலவீனத்தையோ நகரப் பிரதேசங்களுக்கு செலவீடு செய்யப்படலாம் என்று கூறியிருக்கின்றார். இது உண்மையிலே எனக்கு வேதனையளிக்கின்ற விடயம் ஆகும்.

என்னைப் பொருத்தவரைக்கும் கடந்த சபையில் இருந்து இச் சபைக்குட்பட ஏரத்தாள என்னுடைய வட்டாரத்தில் இருக்கின்ற பெரும்பகுதியான வீடுகளுக்கு நான் தனியாக சென்று எங்களுடைய பிரதேசத்திலே ஒவ்வொரு நாளும் திண்மக் கழிவு அகற்றுவதற்குரிய சேவையை பெற வேண்டும். இதற்காக சபையினால் தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற வரிப் பணத்தை நீங்கள் செலுத்த வேண்டும், நீங்கள் முன்வர வேண்டும் என்று கூறியிருக்கின்றேன். இன்ஷா அல்லாஹ் இன்று இச் சபையிலே கேட்டுக் கொள்கின்றேன். அதாவது இச் சபையிலே நடைமுறையில் உள்ள சம்மந்தப்பட்ட ஊழியர்களை அவர்களோடு நானும் சேர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் அனுமதி வழங்கினால் 02 வாரகாலத்துக்குள் அல்லது ஒரு வார காலத்துக்குள் புளக் ஜே மேற்கு – 01, 02 பிரிவுகளுடைய அவ் வரிப்பணத்தை அறவிட்டு என்னால் தரமுடியும் என்று நான் கூறுகின்றேன். அதற்காக அப் பிரதேசத்திற்கு முதற்கட்டமாக இத் திண்மக்கழிவு அகற்றுகின்ற வாகனங்களை தந்து உதவ வேண்டும் என்று கேட்டு, உதாரணமாக கௌரவ உறுப்பினர்களை நான் மதிப்பது எந்தளவுக்கு என்றால் என்னுடைய தாயாரது வீட்டுக்கு முன் இருக்கின்ற மின் விளக்கு எரிந்ததைக்கூட கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்களுக்கு குறுஞ்செய்தி மூலம் அனுப்பி அம் மின்விளக்கை திருத்தித் தாருங்கள் என்று கேட்டிருந்தேன். அந்தளவுக்கு நான் மதிப்பவன். எனவே தயவு செய்து எந்த ஒரு உறுப்பினரும் கோபத்தில் கொள்ளாதீர்கள். இதனை என்னுடைய இயலாமையாக பயன்படுத்தினால் அதனுடைய விளைவுகளையும் நீங்கள் நேரிட வேண்டும் என்பதனையும் இச் சபையிலே கூறிக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, வட்டார அடிப்படையிலான உறுப்பினர்களுக்கு வட்டாரங்கள் பிரிக்கப்பட்டு வட்டார அடிப்படையில் உறுப்பினர்கள் போடப்பட்டு தேர்தல் நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதே நேரத்தில் பட்டியல் அடிப்படையில் வந்த உறுப்பினர்கள் மக்களுக்கு செய்ய வேண்டிய சேவைகள் இருக்கின்றது. இங்கு எல்லோரும் உறுப்பினர்கள் எல்லோருக்கும் சமனான செயற்பாடுகளும், கடமைகளும் உள்ளது என்று சட்டம் சொல்லுகின்றது. அவ் அடிப்படையில் பட்டியலில் வந்த உறுப்பினர்களின் செயற்பாட்டை இவ் ஊரில் மேற்கொள்ள வேண்டும் என கௌரவ தவிசாளர் அவர்கள் தெளிவுபடுத்துவது மிகவும் அவசியமாக இருக்கின்றது. அத்தோடு கௌரவ உறுப்பினர்களில் பல கட்சிகளை சேர்ந்தவர்கள், பல கட்சியின் அமைப்பாளர்கள் இருக்கின்றார்கள். அந்தந்த அரசாங்கங்கள் வருகின்ற போது அந்தக் கட்சியை சார்ந்த அமைப்பாளர்கள் இவ் ஊருக்கான சேவைகளை கொண்டு வருகின்ற போது இச் சபை ஊடாகவோ, உள்ளூராட்சி அமைச்சின் ஊடாகவோ மேற்கொள்ளப்படாது மத்திய அரசாங்கத்தின் ஊடாக கொண்டு வரப்படுகின்ற சேவைகளை அவர்கள் அக் கட்சி கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட அடிப்படையில் இவ் ஊரில் எங்கும் மேற்கொள்ளலாம். அவர்கள் சபை சார்பாக

செய்யப்படவில்லை, மத்திய அரசாங்கம் சார்பாக செய்கின்றார்கள். எனவே அதில் எந்த விதமான கட்டுப்பாடும் இருக்கமாட்டாது என சட்டத்தில் இருக்கும் என நான் நினைக்கின்றேன். அவ் அடிப்படையில் கடந்த காலங்களில் சம்மாந்துறையை எடுத்துக் கொண்டால் பல வட்டாரங்களிலும் 10 கோடி ரூபாக்கு மேலான பாதைகள் அமைத்திருக்கின்றேன். எனவே கட்சி அடிப்படையில் மத்திய அரசாங்க நிகழ்வுகளில் ஊடாக செய்கின்ற எந்த வேலையையும் கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் பிரதேச சபை உறுப்பினராக தொடர்பு படுத்த முடியாது என நான் எனது கருத்தை முன்வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, உறுப்பினர்கள் என்ற வகையில் ஒரு வட்டாரத்தில்தான் நிற்க வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை. தனது வட்டாரத்திற்குள் மற்றவர்கள் வருவது, அவரை அறியாமல் வேலை செய்வது என்பது கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களது வேண்டுகோள் உண்மையிலே நானும் அதை வரவேற்கின்றேன். ஏனென்றால் அவர்கள் தேர்தல் ஊடாக மக்களின் வாக்குகளை வென்று பல செலவுகளை செய்து வந்தவர்கள். அவர்களை வைத்துதான் நாங்களும் தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டோம். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களிடம் சில ஆலோசனைகள் பட்டியலில் இருந்து வந்த உறுப்பினர்கள் கேட்க வேண்டும் என்பது எனது கருத்து. ஏனென்றால் சில விடயங்கள் செய்யும் போது உதாரணமாக ஜிப்ரி உறுப்பினர் அவர்கள் மலையடிக்கிராமத்தில் கஸ்டப்பட்டு ஒரு வாக்காளராக வந்தார். அவருடைய அனுமதி இல்லாமல் அல் அர்ஷத் பாடசாலையில் ஒரு கட்டடத்தை திறப்பு விழா செய்யும் போது என்னை அழைக்காவிட்டாலும் அவரை கட்டாயமாக அழைத்திருக்க வேண்டும். அந் நேரம் எல்லா மக்களும் ஏன் அவரை அழைக்கவில்லை என்று கேட்டுக்கொண்டார்கள். இப்படியான தவறுகள் நிகழ்வதை வைத்துதான் சுட்டிக்காட்டுகின்றார்களே தவிர எவரும் அபிவிருத்தி வேலைகளை செய்ய வேண்டாம் என்பதற்கு எந்த தடையும் இல்லை. அபிவிருத்தி வேலைகளை யார் செய்ய வேண்டும் என்றாலும் அவ் வட்டாரத்தில் வாக்கு கேட்டு வந்த உறுப்பினர்களை மதிக்க வேண்டும். நானும் சில பாதைகள் செய்யும் போது எனது கௌரவ உறுப்பினரிடம் கேட்டுதான் செய்தேன். எனவே உரிய வட்டாரத்திற்குள் நின்று கொள்வது சிறப்பாக இருக்கும் என்பதை எனது கருத்தாகவும், எல்லா உறுப்பினர் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல் சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர்களது கருத்துக்களை உள்வாங்கியவளாக, நான் எனது சேவைகளை பிரதேச சபையினால் 10 இலட்சம் ரூபா தந்தாலும் அதனை 10 வட்டாரங்களுக்கும் பிரித்துதான் நேர்மையாகவும், நேர்த்தியாகவும் செய்திருக்கின்றேன். ஆகவே என்னால் எனது அறிவுக்கு ஏற்றது போல் என்னுடைய அபிவிருத்திகளை செய்யும் போது நான் கொழும்பில் இருந்து வரும்போது இவர்களிடம் அந்த நிமிடம் கேட்க முடியாது. கௌரவ உறுப்பினர் சரிபா அவர்கள் அல் அர்ஷத் கட்டடம் தொடர்பாக கூறினார். நான் பாடுபட்டு எடுத்து வந்ததன் காரணமாக சமூக சேவையாளராகத்தான் சென்றேன். அக் காலகட்டத்தில் எந்த உறுப்பினரோ, அரசியல் வாதிகளோ தலையிட முடியாத நிலமையில் சமூக சேவையாளராக சென்றேன்.

கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் மல்காம்பிட்டி பள்ளிவாசல் தொடர்பாக கூறினார்கள். மல்காம்பிட்டி பள்ளிவாசல் தொடர்பாக, நான் கூறும் விடயம் என்னவென்றால் சம்மாந்துறை குப்பை ஊராகத்தான் எமது பார்வையில் தெரிகின்றது. இதை தவிர்ப்பதற்காகத்தான் நாம் எமது பணத்தை வெளியில் செல்லாமல் எமது ஊருக்கே செலவளிக்க வேண்டும் என்பதற்காக மல்காம்பிட்டி பள்ளியில் ஒரு மண்டபம் அமைக்க சொன்னேன். கைகாட்டி சிறுவர் பூங்காவை சென்று பார்த்தால் மிகவும் அழகாக இருக்கின்றது. நீங்கள் கட்டாயம் எல்லாரும் சென்று பார்க்க வேண்டும். அதனை செய்த சலீம் என்பவருக்கு சபை சார்பாக ஏனைய சிறுவர் பூங்காவில் இருக்கின்ற ஊழியர்களையும் எடுத்து அவரை கௌரவப்படுத்தி அவருக்கு பரிசு வழங்க வேண்டும். நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு அருகில் இருப்பதற்கு எல்லைகள் போட்டதாக கன்றுகள் இருக்கின்றது. இதன் பக்கத்தில் எல்லைகளை காட்டக்கூடாது. ஏனென்றால் அச் சிறுவர் பூங்கா இன்னும் விருத்தி செய்யக்கூடிய நிலமை இருக்கின்றது. வேலிகளை அமைக்காமல் கன்றுகளை நாட்டினால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன். சலீம் என்பவருக்கு சபையால் பரிசு வழங்க வேண்டும். அல்லது எனது சொந்தப் பணத்தில் அப்பரிசை வழங்க வேண்டும் என்று நினைக்கின்றேன்.

CEB கம்பங்களுக்கு கொங்கிறீட் இட்டு அடைக்க வேண்டும் என்று கூறினேன். ஆனால் அக் கடிதம் கொடுத்த நிலமையில் இருக்கின்றது. அதற்கு என்ன பதில் வந்தது என்று தெரியாது அது

நடைபெறுமா? இல்லையா? என்பதும் தெரியாமல் இருக்கின்றது. சென்ற சபையில் வரி அறவிடுவது தொடர்பாக கதைத்தோம். அது இன்னும் நடைபெறவில்லை. அதற்கான தீர்மானமும் எடுக்கவில்லை. சென்ற சபையில் நைய்னாகாட்டுக்கு பஸ் ஒன்று கேட்டு போக்குவரத்து சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்ப வேண்டும் என்று கேட்டேன். இக்கடிதம் எழுதப்பட்டதா? இல்லையா? என்பதும் எனக்கு கிடைக்கவில்லை. திண்மக் கழிவுகளை வேறுபடுத்தி எடுப்பது சிறப்பானது. தற்போது எமது வட்டாரத்தில் திண்மக் கழிவு மிகக் குறைவாக எடுக்கப்படுகின்றது. குப்பைகளை பிரித்து கொடுப்பதனால் எமது சபைக்கு இலாபம் வருகின்றது என்றால் நிச்சயமாக பிரத்துதான் எடுக்க வேண்டும். எமது சபைக்கு கடைகளுக்கு அனுமதிப்பத்திரம் எடுப்பதற்கு வந்தால் ஒரு மாதம், 2 மாதம் செல்லுகின்றது.

ஏனென்றால் PHI அவர்கள் 50 அனுமதிப் பத்திரங்களை சேர்த்து தர வேண்டும் என்று கூறின்றார்கள். 50 கடைக்காரர்கள் வந்து பதியும் வரை அத்துண்டுகள் இச் சபையில்தான் இருக்கின்றது. 50 நபர்கள் சேர்ந்த பின்னர்தான் பட்டியல் தயாரித்து PHI இற்கு கொடுக்கின்றார்கள். அதன் பின்னர் அவர்கள் 50 இடத்தையும் நாங்கள் எப்படி சென்று பார்ப்பது என்று கூறுகின்றார்கள். எனவே எப்படி நிர்வாகத்தை கொண்டு செல்வது. 2019 ஆம் ஆண்டு 10ம் மாதம் பிரதேச சபைக்கு Tower இற்கு அனுமதி கேட்டு ஒரு கடிதம் வந்தது. இன்னும் அக் கடிதத்திற்கு பதில் அளிக்கவில்லை. அவர்கள் Tower இற்குரிய அனுமதியும் எடுத்து விட்டார்கள். பிரதேச சபை அனுமதி மட்டும்தான் எடுக்க வேண்டும். இதில் வருகின்ற வரவு செலவுகள் நல்ல விடயம் ஆனால் நாம் வரவுகளைத்தான் பார்க்க வேண்டும்.சென்ற சபையிலும் முன்னாள் உப தவிசாளர் கூறினார் Parking ஒன்று அமைக்க வேண்டும் என்று அதற்கான பதில் என்னவென்று தெரியாமல் இருக்கின்றது. நான் கூறிய விடயம் அனைத்திற்கும் பதில் தருமாறு கௌரவ தவிசாளர் அவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் அனைவரினதும் கருத்துக்களை உள்வாங்கியவனாக, தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் அல்லது நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் கூறியது போல் 2வது அமர்விலே விவாதிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டது. எல்லோரும் அரசியலில் ஈடுபடுபவர்கள் எவ்வளவு கட்டுப்பாடு இருந்தும், சட்டங்கள் விதிக்கப்பட்டிருந்தும் சில வேளைகளில் அதனை மீறுவது மனித பழக்கம் ஆகும். ஆனால் அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை நிரந்தர எதிரிகளும் இல்லை. எப்படி இருந்தாலும் தனிப்பட்ட மனித பண்புகள் இருக்க வேண்டும். இன்னுமொரு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவரின் அதிகார எல்லைக்குள் செல்லும் போது அவரையும் அனுசரித்து செயற்படும் போது இப் பிரச்சினைகள் வராது.

கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் பல குறைபாடுகளை சுட்டிக்காட்டினார்கள் இவை எல்லாம் உண்மையாக நிர்வாகத்தில் இருக்கும் பலயீனம் ஆகும். தயவு செய்து கௌரவ உறுப்பினர்கள் முன்வைக்கும் திட்டங்கள், பரிந்துரைகள் செயற்படாவிட்டால் உங்கள் எல்லோருக்கும் உரிமை இருக்கின்றது இச் சபையின் நிர்வாகத்திற்கு பொறுப்பானவர் சபையின் செயலாளர் அவரிடம் சென்று என்ன நிலையில் இருக்கின்றது என்று கேட்க வேண்டும் அதற்கு நான் தடையாக இருந்தால் செயலாளருடன் என்முன் வந்து அதனை கேட்கும் போது இப் பிரச்சினை இருக்காது. நான் மிகவும் கவலையடைந்தேன். அதாவது அண்மையில் கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் அவரின் முக நூலில் எனது படத்தை போட்டு படத்தையும் போட்டு அபிவிருத்தி வேலைகளுக்கு தடையாக இருப்பவர்களின் விபரங்கள் என்று போட்டது எனக்கு மிகவும் மனவருத்தமாக இருந்தது. ஏனென்றால் அவரை அங்கத்தவராக முதல் பிரேரித்தவர் நான். அல் அர்சத் பாடசாலையில் வலது குறைந்த பிள்ளைகளுக்காக சபையில் தீர்மானம் எடுத்து சபையின் குழுவில் அவரையும் அங்கத்தவராக போட்டு, சபையின் முன்மொழிவிற்கு அங்கீகாரம் வழங்கி சபையின் கடிதங்கள் கொடுத்து சபையின் தவிசாளராக

எம்பெசிக்கு கொழும்பு சென்று வெளிநாட்டு தூதுக்குழுவுடன் இருந்து பல கருத்துக்களை முன்வைத்தேன். இவை எல்லாவற்றையும் மூடி மறைத்து தவிசாளரின் படத்தை போட்டு செய்வது உண்மையாக இச் சபை இவ்வளவு காலமும் ஒற்றுமையாக பணித்ததற்கு ஒரு அவமானம் ஆகும். தயவு செய்து நீங்கள் உங்கள் கருத்துக்களை முகநூல் மூலமாக அரசியல் செய்யவேண்டுமானால் தயவு செய்து எனது படத்தை பாவிக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, மல்வத்தை நூலகம் Partition செய்ய வேண்டியுள்ளது. அதற்கான அங்கீகாரத்தை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். மதிப்பீட்டறிக்கைகள் தேவையாக இருக்கின்றது தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடம் கேட்கும் போது Busy என்கின்ற கருத்து வருகின்றது. எனவே மாற்று ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன். நீங்கள் பேசும் போது எனக்கு வாழ்த்து தெரிவித்தீர்கள். நான் கௌரவ தவிசாளர் உட்பட கௌரவ உறுப்பினர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். நான் எனது கடமைகளை கடந்த காலம் போன்று தொடர்ந்து செய்வேன் என்று கூறி நிறைவு செய்கின்றேன்.

**தீர்மானம் - 04/25/09**

மல்வத்தை நூலகத்தினை பாலர் பாடசாலை இயங்கிய கட்டிடத்திற்கு இடமாற்றி Partition செய்வதற்கும் மற்றும் மல்வத்தை உப அலுவலகத்திற்கு தேவையான தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வீ.ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

Tower விடயம் தொடர்பாக சன நெரிசலாக வாழும் போது Tower வருவதனை மக்கள் எதிர்க்கின்றார்கள். சூழல் பாதுகாப்பு, Tele Communication அனுமதி வழங்கினாலும் அயலவர்களின் எதிர்ப்பு இருந்தால் செய்ய இயலாது. UDA அனுமதி கொடுக்க வேண்டும். இவ் விடயத்தை நீங்கள் உணர்ந்து படிக்க வேண்டும். ஒவ்வொரு அனுமதியிலும் இறுதியில் பிரதேச சபையின் அனுமதி வேண்டும். நிர்வாக ரீதியில் அவர்களிடம் ஒவ்வொரு வீடாக சென்று அவர்களின் அபிப்பிராயங்களை எடுத்து விட்டு ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று கூறினேன். அது இன்னும் செயற்படுத்தப்படவில்லை. நீங்கள் கூறினீர்கள் எத்தனையோ நபர்கள் ஒப்பமிட்டுள்ளார்கள் என்று ஆனால் அதில் வீட்டு இலக்கம் 43 என்றால் 143 வது வீட்டு இலக்கமுடையவர் சம்மதம் தெரிப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை. 10 வீடுகள் இருந்தால் அதில் 08 நபர்கள் எதிர்த்தால் செய்ய இயலாது. 02 நபர்கள் எதிர்த்தால செய்யலாம். இதை செய்து தரவேண்டியது நிர்வாகத்தின் பொறுப்பு. செயலாளர் அவர்கள் கௌரவ உறுப்பினர்களையும், அக் குறிச்சி GN யையும் உள்வாங்கி இக் கிழமைக்குள் 18ஆந் திகதி முதல் இதன் முடிவை தரவேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, Tower விடயம் உண்மையிலே ஊரின் அபிவிருத்திக்கு முக்கியமான விடயம். அதில் எமக்கு இருக்கும் அதிகாரத்தினால் மற்றவர்களுக்கு கொடுத்து இன்னும் பிரச்சினையாக்காமல் ஊரின் அபிவிருத்திக்கு தேவையாக இருந்தால் அதனை யோசிப்பதோடு, என்னுடைய வட்டாரத்தில் இருக்கின்ற மபாஸா பள்ளிவாசல் சூழலிலே வழப்போக்கர்கள் அமர்ந்து இருப்பதற்கு 2 கதிரைகள் போடப்பட்டிருக்கின்றது. என்னிடம் யாருமே கலந்தாலோசிக்கவில்லை. ஆனால் எனக்கு முறைப்பாடுகள் வந்து கொண்டிருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இது பள்ளிவாசலினால் விடுக்கப்பட்ட வேண்டுகோள் ஆகும். பள்ளிவாசல் நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து செயலாளர் அவர்களினால் செய்யப்பட்டது. இது உங்களுக்கு அறியத்தந்திருக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அதே பள்ளிவாசல் நிர்வாகிகள் தான் என்னிடம் வந்து முறைப்படுகின்றார்கள். அது இருக்கின்ற இடத்தை வேறு இடத்தில் ஏனையவர்களுக்கு இடைஞ்சலாக இல்லாமல் செய்தால் சிறப்பாக இருக்கும். ஏனென்றால் இரவு 11,12 மணிக்கு இளைஞர்கள் கூடி சத்தம் போடுவதனால் இடைஞ்சலாக உள்ளது என்று பக்கத்து வீட்டார்கள் முறைப்படுகின்றார்கள். எனவே அதனை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடம் அறிவித்து அதனை மாற்றலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எனது வட்டாரம் சம்மாந்துரையின் மத்தி ஆகும். அதில் கிராம சேவகர் பிரிவு 07 இற்குள் 01ம் குறுக்குத்தெருவில் இங்கு உறுப்பினராக இருந்து சேவைகள் செய்து பாராட்டுக்கள் தெரிவிக்கின்ற அதே உறுப்பினர் சட்ட விரோதமாக வடிகானுக்கு மேல் மூடி இட்டு அதற்குள் பூக்கன்று வளர்த்து அது பரந்து வீதியை மறித்து இருக்கின்றது. அதை நான் வெட்டும்படி சொல்லியும் நீங்கள் ஒரு உறுப்பினர் நாம் ஒரு முன்மாதிரியாக நடக்க வேண்டும் என்று கூறியதற்கு அவர் நானும் ஒரு உறுப்பினர்தான் இவ் வட்டாரத்திற்கு நீங்கள் உறுப்பினரா? நான் உறுப்பினரா? என்ற கேள்வி ஏற்பட்டு நான் அதனை அவசரமாக செயலாளருக்கு எழுத்து மூலமாகவும் அறிவித்து அது இன்னும் வெட்டாமல் காணப்படுகினற்து. எனவே சட்டவிரோதமான செயற்பாடுகளுக்கு அப்படியான உறுப்பினர் இருக்க கூடாது என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இன்று வரைக்கும் சபையின் கௌரவத்தை பேணிவருகின்றோம். அதனை தொடர்ந்து பேண வேண்டும் என்று கேட்டு, சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

***2020.03.12 Sammanthurai Pradeshiya Sabha -04/25***

*2020.03.12 Sammanthurai Pradeshiya Sabha -04/25*